செய்தி வெளியீடு எண்: 205 நாள்: 01.04.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.4.2013) தலைமைச் செயலகத்தில், தமிழகத்திலுள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் 151 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 134 விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவச் செல்வங்களுக்கும், குறிப்பாக கிராமப்புற ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த தொழிற்கல்வி கிடைத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், மாணவ, மாணவியர்களின் கல்வித் திறனை மேம்படுத்த அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் காலியாகவுள்ள உதவிப் பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர் பணியிடங்களை விரைந்து நிரப்பிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

தமிழகத்தில் செயல்பட்டுவரும் அரசு பொறியியல் கல்லூரிகளில் காலியாகவுள்ள 154 உதவி பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் காலியாகவுள்ள 139 விரிவுரையாளர் பணியிடங்கள் விரைந்து நிரப்பப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பிற்கிணங்க, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் போட்டித் தேர்வு நடத்தப்பட்டு, அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு 151 உதவி பேராசிரியர்களும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 134 விரிவுரையாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்திலுள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் 151 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 134 விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கி, மாணவ மாணவியர்களுக்கு சிறந்த முறையில் கல்வி பயிற்றுவித்து, அவர்தம் வாழ்வில் உயர்ந்திடும் வகையில் பணியாற்றிட வேண்டும் என்று புதிதாக பணி நியமனம் பெற்றவர்களுக்கு அறிவுரைகள் வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பணி நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட உதவி பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை கூடுதல் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 1.4.2013